بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 07/11/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

- **தஹ்ரீகே ஜதீதின் 91 ஆவது ஆண்டில் ஜமாஅத் மக்கள் தரப்பிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட பொருள் தியாகங்கள் பற்றிய குறிப்பு**
- **92 ஆவது ஆண்டின் துவக்கம் பற்றிய அறிவிப்பு**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

مَثَلُ الَّذِیۡنَ یُنۡفِقُوۡنَ اَمۡوَالَہُمۡ فِیۡ سَبِیۡلِ اللّٰہِ کَمَثَلِ حَبَّۃٍ اَنۡۢبَتَتۡ سَبۡعَ سَنَابِلَ فِیۡ کُلِّ سُنۡۢبُلَۃٍ مِّائَۃُ حَبَّۃٍ ؕ

وَ اللّٰہُ یُضٰعِفُ لِمَنۡ یَّشَآءُ ؕ وَ اللّٰہُ وَاسِعٌ عَلِیۡمٌ ﴿۲۶۲﴾

பொருள்: தங்கள் செல்வங்களை அல்லாஹ்வின் வழியில் செலவிடுகின்றவர்களுக்கு, ஒரு தானியம் உதாரணமாகும். அது ஏழு கதிர்களை முளைப்பிக்கும். ஒவ்வொரு கதிரிலும், நூறு தானியங்கள் இருக்கும். மேலும் அல்லாஹ் தான் நாடியவருக்கு அதிக(மதிக)மாகக் கொடுக்கின்றான். மேலும் அல்லாஹ் தாராளமாகக் கொடுப்பவனும், மிக்க அறிபவனுமாவான். (திருக்குர்ஆன் 2: 262)

அல்லாஹ்வின் அருளால், ஜமாஅத்துடைய தஹ்ரீக்கே ஜதீதின் புதிய நிதியாண்டு நவம்பர் முதல் தேதியிலிருந்து துவங்குகிறது. இதையொட்டி, தஹ்ரீக்கே ஜதீதின் புது ஆண்டிற்கான அறிவிப்பும் செய்யப்படுகிறது. மேலும் கடந்த ஆண்டில் நிகழ்ந்த பொருளாதார தியாகங்களும் குறிப்பிடப்படுகின்றன. இதேபோல், பொருளாதார தியாகத்தின் முக்கியத்துவத்தைப் பற்றியும் சிறிது கூறப்படுகிறது.

தஹ்ரீக்கே ஜதீத் 1934 இல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்களால் தொடங்கப்பட்டது. இதற்குக் காரணம், அந்த நேரத்தில் அஹ்ராரிகள் ஜமாஅத்துக்கு எதிராக ஒரு ஃபித்னாவை எழுப்பி பெரும் கூச்சலிட்டனர். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் மண்ணறை இருக்கின்ற பெஹெஷ்தி மக்பராவை இழிவுபடுத்தும் திட்டமும் இருந்தது. அரசாங்கமும் ஒருவகையில் எதிரிகளை ஆதரித்துக் கொண்டிருந்தது.

அத்தகைய நேரத்தில், ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊத் (ரலி) அவர்கள், அஹ்மதிய்யத் மற்றும் இஸ்லாத்தின் தூதுச்செய்தியை உலகின் ஒவ்வொரு மூலைக்கும் எடுத்துச் சென்று, ஜமாஅத்தின் அமைப்பை வலுப்படுத்த, ஒரு பொருளாதார தியாகம் வழங்குமாறு ஜமாஅத்திற்கு வலியுறுத்தினார்கள். இதன் மூலம், நாம் எதிரிகளின் அவதூறுகளையும் முழக்கங்களையும் தடுக்க முடியும். மேலும், ஒரு இடத்தில் எதிர்ப்பு இருந்தால், மற்றொரு இடத்தில் முன்னேற்றம் காணப்பட வேண்டும்; ஜமாஅத்தின் அமைப்பு தொடர்ந்து பரவ வேண்டும் என்றும் கூறினார்கள்.

அல்லாஹ்வின் அருளால், இன்று அஹ்மதிய்யத் மற்றும் உண்மையான இஸ்லாத்தின் தூதுச் செய்தி உலகின் அனைத்து நாடுகளையும் சென்றடைந்துள்ளதையும், நம்முடைய மிஷனரிகள் மற்றும் முபால்லிக்கள் அங்கு பணியாற்றுவதையும் காண்கிறோம். உலகின் பல்வேறு நாடுகளில், நாம் பள்ளிவாசல்களைக் கட்டியுள்ளோம். நம்முடைய பள்ளிக்கூடங்கள் செயல்படுகின்றன. மருத்துவமனைகள் இயங்குகின்றன. ஜமாஅத்தின் பிரச்சாரகர்கள் மற்றும் முரப்பிகளுக்கு சேவை செய்ய வாய்ப்பு கிடைக்கிறது. புத்தகங்கள் வெளியிடப்படுகின்றன. மர்க்கஸ் ஸ்டுடியோக்கள் மட்டுமின்றி, பல நாடுகளில் MTA ஸ்டுடியோக்கள் நிறுவப்பட்டுள்ளன. வானொலி நிலையங்கள் நிறுவப்பட்டுள்ளன. இந்த அனைத்துப் பணிகளின் செலவுகளும், மற்ற சந்தாக்களில் இருந்தும் பூர்த்தி செய்யப்பட்டாலும், இதில் தஹ்ரீக்கே ஜதீத் மிக முக்கிய பங்கு வகிக்கிறது.

காதியானின் ஒவ்வொரு செங்கல்லாக அழிப்போம்; அஹ்மதிய்யத்தை வேரோடு அழித்து விடுவோம் என்ற அஹ்ராரிகளின் வாதம் இருந்ததே, இன்றுவரை நமது எதிரிகள் இந்த முழக்கங்களை எழுப்புகிறார்கள். இந்த முழக்கங்களுக்கான பதில் ஒவ்வொரு ஆண்டும் ஜமாஅத்தின் முன்னேற்றங்களால் வழங்கப்படுகிறது. அல்லாஹ்வின் அருள்களால் வழங்கப்படுகிறது. ஜமாஅத்தில் பைஅத் செய்து இணைகின்ற மக்கள் இதற்கு பதில் ஆவார்கள். இன்று 220 நாடுகளில் பரவியுள்ள ஜமாஅத்தின் முன்னேற்றம் இதற்கு பதில் ஆகும்.

எனவே, அல்லாஹ்வின் இந்தச் செயலும், ஆதரவும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வாதம் உண்மையாக இருந்தது; இருக்கிறது என்பதற்குச் சான்றாகும். அல்லாஹ்வின் அருளால், அஹ்மதிய்யத் என்பது எந்த மனிதனாலும் நிறுவப்பட்ட ஒரு செடி அல்ல. இது எந்த அரசாங்கத்தாலும் நிறுவப்பட்ட ஒரு செடி அல்ல. மாறாக, இது அல்லாஹ்வால் நிறுவப்பட்ட ஒரு செடியாகும். இது

உலகம் முழுவதும் கிளைகள் பரவியிருக்கும் ஒரு பெரிய மரமாக மாறியுள்ளது. மேலும் அல்லாஹ் அதை மேலும் பரவச் செய்து, கனிகளைத் தரச் செய்கிறான். இந்த செயல்முறை தொடர்கிறது மற்றும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஆரம்பத்தில் ஓதியது அதிகாரம் அல்பகராவின் 262 -ம் வசனம் ஆகும். அதன் ஒளியில் கூறினார்கள்:*

நீங்கள் என் வழியில் என்ன செலவிடுகிறீர்களோ அதற்கு எந்த ஒரு வெகுமதியையும் நான் உங்களுக்கு வழங்காமல் விடமாட்டேன். அதையும் தாண்டி, உங்கள் தியாகத்திற்கு வெகுமதி 700 மடங்கு அல்லது அதற்கும் மேல் அதிகரிக்க எனக்கு சக்தி இருக்கிறது என்று அல்லாஹ் வாக்குறுதி அளித்துள்ளான். எனவே, அல்லாஹ் இவ்வாறு வழிகாட்டல் வழங்கி, மனம் திறந்து அல்லாஹ்வின் பாதையில் தொடர்ந்து செலவு செய்து கொண்டே இருங்கள் என்று நம்பிக்கையாளர்களின் உள்ளங்களில் ஓர் உந்துதலை உருவாக்கியுள்ளான். அல்லாஹ்வின் மார்க்கத்தைப் பரப்புவதற்காகச் செலவிடுங்கள் என்று கூறியுள்ளான்.

இது இந்தக் காலத்தில் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் மஹ்தி (அலை) அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த பணியாகும். பின்னர் அன்னாரது ஜமாஅத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணியாகும். பொருள் தியாகம் செய்யக்கூடியவர்கள் தங்களுடைய சம்பவங்களையும் எனக்கு எழுதுகிறார்கள். அல்லாஹ் எவ்வாறு அவர்களுக்குத் தியாகம் செய்ய வாய்ப்பை வழங்கியுள்ளான்! மேலும் எவ்வாறு அவர்களின் நம்பிக்கையை உறுதிப்படுத்தியுள்ளான் என்று மலைத்துப் போகிறோம்.

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் இறைவழியில் செலவு செய்வதன் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவது தொடர்பாக சில அறிவுசார்ந்த மற்றும் வரலாறு சார்ந்த சான்றுகளை எடுத்துரைத்தார்கள். மேலும், கூறினார்கள்:*

எனவே பொருள் தியாகங்களைச் செய்பவர்கள் தங்கள் இறைவணக்கத்தின் தரத்தை அதிகரிக்க வேண்டும் என்பதற்கு இது ஒரு வழிகாட்டுதலாகும். பொருள் தியாகம் (மட்டும்) செய்து விட்டு, நம்முடைய இறைவணக்கத்தை முழுமைபடுத்திவிட்டோம் என்று நினைத்து விடக்கூடாது. நபி (ஸல்) அவர்களின் காலத்தில் சஹாபிகளின் உதாரணங்களும் உள்ளன. இதே போன்று, ஜமாஅத்திலும் சான்றோர்களின் உதாரணங்கள் இப்படியே இருந்தன. அவர்கள் தங்கள் செல்வங்களை இறைவழியில் எண்ணி எண்ணி செலவு செய்யவில்லை. மாறாக, தயக்கமின்றி செலவு செய்தனர்.

ஹஸ்ரத் கலீஃபத்துல் மஸீஹ் அவ்வல் (ரலி) அவர்களும் பல தியாகங்களைச் செய்து வந்தார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களே இதை ஒரு இடத்தில் இப்படி குறிப்பிடுகிறார்கள்:

“நான் அவரை அனுமதித்திருந்தால், அவர் எல்லாவற்றையும் கொடுத்திருப்பார். (அதாவது, ஹஸ்ரத் மௌலானா நூருத்தீன் கலீஃபா அவ்வல் (ரலி) அவர்கள்) எல்லாவற்றையும் இந்த வழியில் அர்ப்பணித்துவிட்டு, தமது ஆன்மிகத் தோழமையால், எல்லா நேரங்களிலும் உடன் இருப்பது போல, பௌதிகத் தோழமையாலும் எல்லா நேரமும் உடன் இருப்பதற்கான உரிமையை செலுத்தியிருப்பார்.”

ஹுஸூர் அவர்கள் உலகம் முழுவதுமுள்ள பற்றுள்ளவர்கள் தஹ்ரீக்கே ஜதீதின் பொருள் தியாகப் போரில் முன்வைத்த தியாகங்களின் பின்னணியில், ஆல்பானியா, இந்தோனேசியா, கானா, கினீ கானக்கரீ, மாலி போன்ற நாடுகளின் கலப்பற்ற மக்களின் தியாகங்களின் ஈமனை வலுவூட்டும் பல்வேறு சம்பவங்களையும், அவர்கள் மீது அல்லாஹ் பொழியும் அருள்களையும் பரிசுகளையும் எடுத்துரைத்தார்கள்.

இந்தியாவின் தஹ்ரீக்கே ஜதீத் இன்ஸ்பெக்டர் சாஹிப் தெலுங்கானாவைச் சேர்ந்த ஒருவரைப் பற்றி எழுதுகிறார்: அவர் ஹைதராபாத்தில் உள்ள ஒரு இடத்தைச் சேர்ந்தவர். ஏழாயிரம் ரூபாய் வாக்குறுதி அளித்திருந்தார். ஆனால் அவரது வேலை போனதால் அவரால் பணம் செலுத்த முடியவில்லை. அடுத்த ஆண்டுக்கு அவர் பத்தாயிரம் ரூபாய் வாக்குறுதி எழுதச் சொன்னார். அவரிடம், ‘கடந்த வருட வாக்குறுதியையோ நீங்கள் நிறைவேற்றவில்லை; எதிர்காலத்திற்காக அதை அதிகரித்து, வாக்குறுதி அளிக்கிறீர்களே’ என்று கூறப்பட்டது.

எனவே சம்பந்தப்பட்ட அவர், ‘அல்லாஹ்வே அதை ஏற்பாடு செய்வான். நான் அல்லாஹ்வுக்காகவே கொடுப்பதால் உறுதியாக நம்புகிறேன்’ என்று கூறினார். எனவே சில நாட்களிலேயே அவருக்கு முன்பை விடச் சிறந்த வேலை கிடைத்து விட்டது. அவர் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கான சந்தவையும் செலுத்தினார். மேலும் புதிய நிதியாண்டிலும் தனது வாக்குறுதியை ஏழாயிரத்திற்கு பதிலாக முப்பதாயிரமாக அளித்து, அதை செலுத்தியும் விட்டார். இந்த வழியில் எல்லாம் வல்ல அல்லாஹ் அவரது நல்லெண்ணத்திற்கு வெகுமதி அளித்தான்.

*இதற்குப் பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் தஹ்ரீக்கே ஜதீதின் 92 -வது புதிய ஆண்டு துவங்கியுள்ளது என்று அறிவிப்பு செய்தார்கள். 91 -வது ஆண்டின் புள்ளிவிவரங்களை எடுத்துரைத்து கூறினார்கள்:*

அல்லாஹ்வின் அருளால், ஜமாஅத்திற்கு 19.55 மில்லியன் பவுண்டுகள் தியாகம் செய்யும் நல்வாய்ப்பு கிடைத்தது. அல்ஹம்துலில்லாஹ், இது கடந்த ஆண்டைவிட 15,64,000 பவுண்டுகள் அதிகம் ஆகும்.

**மொத்த வசூலின் அடிப்படையில், உலகின் முதல் 10 ஜமாஅத்கள்:** ஜெர்மனி, இங்கிலாந்து, அமெரிக்கா, கனடா, இந்தியா, ஆஸ்திரேலியா, இந்தோனேசியா, மத்திய கிழக்கு நாடுகள் மற்றும் கானா.

மேலும் மொரிஷியஸ் மற்றும் ஹாலந்து ஆகிய ஜமாஅத்கள் சிறப்பாக அதிகப்படுத்தியுள்ளன.

**ஒட்டுமொத்த செயல்பாட்டைப் பொறுத்தவரை, மிகச் சிறப்பாகச் செயல்பட்ட குறிப்பிடத்தக்க ஜமாஅத்கள்:**

பெல்ஜியம், ஸ்வீடன், ஃபிரான்ஸ், ஹாலந்து, கபாபீர், பங்களாதேஷ், புர்கினாஃபாசோ, நியூசிலாந்து, சிராலியோன், பெனின், மாலி, நைஜர், துருக்கி, ஜார்ஜியா, மத்திய கிழக்கின் ஜமாஅத்கள் மற்றும் ஆஸ்திரேலியா.

**ஆப்பிரிக்காவில், மொத்த வசூலின் அடிப்படையில், முதல் ஐந்து நாடுகள்:** கானா, மொரிஷியஸ், நைஜர், புர்கினாஃபாசோ மற்றும் தான்சானியா.

தஹ்ரீக்கே ஜதீதின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கை 17 லட்சம் வரை உள்ளது. இந்த ஆண்டு அறிக்கைகளின்படி, ஆறாவது பதிவேட்டில் 43,588 உறுப்பினர்கள் இணைந்துள்ளனர்.

**இந்தியாவின் முதல் 10 மாநிலங்கள்:**

கேரளா, **தமிழ்நாடு**, தெலுங்கானா, ஒடிசா, ஜம்மு காஷ்மீர், கர்நாடகா, பஞ்சாப், வங்காளம், மகாராஷ்டிரா மற்றும் டெல்லி.

**இந்தியாவின் முதல் 10 ஜமாஅத்கள்:**

ஹைதராபாத், **கோயம்புத்தூர்**, காதியான், கோழிக்கோடு, **மேலப்பாளையம்**, மஞ்சேரி, பெங்களூரு, கேரங், கொல்கத்தா மற்றும் கருளாயி.

*இதற்குப் பிறகு ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) கூறினார்கள்:*

இது தஹ்ரீக்கே ஜதீதின் முதல் பதிவேட்டின் 92 -வது ஆண்டாகும். அதன் பழைய கணக்குகள் தொடர்கின்றன.

இரண்டாவது பதிவேட்டின் 82 -வது ஆண்டு,

மூன்றாவது பதிவேட்டின் 61 -வது ஆண்டு,

நான்காவது பதிவேட்டின் 41 -வது ஆண்டு,

ஐந்தாவது பதிவேட்டின் 22 -வது ஆண்டு மற்றும்

ஆறாவது பதிவேட்டின் மூன்றாம் ஆண்டு இப்போது தொடங்கும். புதிதாக வருபவர்களை ஆறாவது பதிவேட்டில் கணக்கிட வேண்டும்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் பொருள் தியாகம் தொடர்பான ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்ஊத் (அலை) அவர்களின் மேற்கோள் ஒன்றை எடுத்துரைத்துவிட்டு இவ்வாறு துஆ செய்தார்கள்:*

அல்லாஹ் இந்த பொருள் தியாகங்களின் காரணமாக நமக்கு இஸ்லாத்தின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கான பாக்கியத்தை வழங்குகிறான். அல்லாஹ் நமது முயற்சிகளில் அளவுகடந்த அருள் செய்து, அவற்றின் சிறந்த பலன்களை உருவாக்குவானாக! மேலும், நாம் விரைவில் உலகில் ஏக இறைவனின் ஆட்சி நிலைபெறுவதைக் காண்போமாக! நபி (ஸல்) அவர்களின் கொடி பரப்பதைக் காண்போமாக!

اَلْحَمْدُ لِلّٰهِ! اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ
سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا
عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ
وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி M. ஷஹாபுத்தீன்)**